Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 12 [ 27-07-1993 ] செவ்வாய்க்கிழமை ஓசை 159

## ஆயுத விற்பனையில் அமெரிக்கா முதலிடம்

மூன்றாம் உலக நாடுகளுக்கு ஆயுத விநியோகம் செய்யும் முன்னணி நாடாக அமெரிக்கா தொடர்ந்து விளங்கிவருகிறது. 1991இல் 48 9 சத விகிதமாகஇருந்த அதன் ஆயுத விநியோகம் 1992இல் 56.8 சதவிகிதமாக உயர்ந்தது. ஆனால் ரஷ்யாவின் ஆயுத விநியோகம் 5 4 சத விகிதமாக படுவீழ்ச்சி கண்டுள்ளது. 1991இல் 590 கோடி டொலருக்கு ஆயுதவிநியோகம் செய்தரஷ்யா 1992இல் 130கோடி டொலருக்கே ஆயுதவிற்பனை செய்துள்ளது. 1992இல் மூன்றாம் உலக நாடுகளுக்கு அமெரிக்காவும் இதர நாடுகளும் 2390 கோடி டொலர் ஆயுதங்களை கொடுத்துள்ளன இதில் அமெரிக்க ஆயுதங்களின் பெறுமதி 1360 கோடி டொலர். ஆனால் சென்ற ஆண்டே விற்பனைத் தொகை கடந்த ஆண்டுகளை விடக் குறைவானதுஎனக் கூறப்படுகிறது. (6 ஆம் பக்கம் பார்க்க)

# மண்கிண்டி மலை ராணுவ முகாம் தகர்ப்பு

# புலிகளின் தாக்குதல் வேகம்;

# இராணுவத் தரப்பில் அதிர்ச்சி!

(கொழும்பு)

மண்கிண்டிமலை இராணுவ முகாம்களையும், அதனைச் சூழவிருந்த மினிமுகாம்கள், காவலரண்கள் என்பனவற்றையும் விடுதலைப் புலிகள் தாக்கி அழித்த வேகம் சிறிலங்கா இராணுவத்தரப்பில் பெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடர்சங்கிலிபோன்று அண்மையில் இருந்த இராணுவ முகாம்களுக்கு தாக்குதல் குறித்த தகவல்கள் கிடைக்கும் முன்னரே முகாம் புலிகள் வசம் வீழ்ச்சி அடையும் நிலை ஏற்பட்டது குறித்து இராணுவ வட்டாரங்கள் ஆச்சரியம் அடைந்துள்ளன.

மணலாற்றுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பிற்கென அமைக்கப்பட்டிருந்த இவ்இராணுவ முகாம், தொடர் இராணுவ முகாம்களின் ஒரு முகாமாகும் இம் முகாம்களை அண்டி மேலும் பல முகாம்கள் அமைந்துள்ளன.

இந் நிலையில், மண்கிண்டி மலை இராணுவமுகாம் மீதும் மினிமுகாம்கள் மீதும் புலிகள் நடத்திய தாக்குதல்கள் ஏனைய முகாங்களைத் தாமதித்தே சென்றடைந்ததாகத் தெரியவருகின்றது அதாவது விடுதலைப் புலிகள் 30 நிமிட நேரத்திற்குள் ஒரு முகாமைக் கைப்பற்றும் அளவிற்கு துரித வேகத்தில் நடத்திய இத்தாக்குதலில் முகாம்வீழ்ச்சி அடையும் நிலையிலேயே தகவல் ஏனைய முகாம்களுக்குச் சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மண்கிண்டி மலை இராணுவ முகாம் தாக்குதலின் போது இராணுவத்திற்குச் சொந்தமான தொலைத் தொடர்பு சாதனத்தை விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடங்கி சிறிது நேரத்திற்குள் கைப்பற்றிவிட்டதாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

## கருப்பு ஜூலை நாள் இன்று அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

கறுப்பு ஜூலைதினம் இன்று யாழ் குடா நாடு எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது.

வெலிக்கடை சிறையில் இரண்டாவது தடவையாக தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்ததன் பத்தாவது ஆண்டுநிறைவு தினத்தை ஒட்டி அனுஷ்டிக்கப்படும் இன்றைய கறுப்பு ஜூலை தினத்தில் மாணவர்கள், அலுவலக ஊழியர்கள் மற்றும் அனைத்துத் தமிழீழ மக்களும் கறுப்புப் பட்டி அணிந்து தமது அன்றாட அலுவல்களில் ஈடுபடுவர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

கொழும்பில் வைத்திய சிகிச்சை மேற்கொள்ள யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவகுழுவினால் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் குடும்ப மீள்சேர்தல் திட்டத்தின் கீழ் பயணம் செய்ய உறுதிப்படுத்தப்பட்டவர்களும் எதிர்வரும் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ் போதனா வைத்தியசாலை வளாகத்துக்கு, பிரயாணத்திற்குத் தயாராக வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவர்கள் வைத்தியசாலை வளாகத்திற்குள் வர ஊழியர் நுழைவாயிலைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## குமண மூலம் செல்லும் பயணிகள் கவனத்திற்கு

மோர்க்ஸ் குமண கப்பல் மூலம் பருத்தித்துறையிலிருந்து திருக்கோணமலை வரை செல்வதற்காக விண்ணப்பித்துள்ள அனைவரும் நாளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணம் பணிமனைக்கு அலுவலக நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயணத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அன்றைய தினம் தமது பயணச்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தபாலில் அனுப்பப்படமாட்டா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

முதலாம் இரண்டாம் வருட வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் இதற்கான பரீட்சை அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் மேற்படி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட படையினர் தொகை 52ஆக அதிகரிப்பு

(பேர்லின்)

மணலாற்றுப் பகுதியில் அமைந்திருந்த மண்கிண்டி மலை இராணுவ முகாம் மற்றும் மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்

இத்தாக்குதலில் 34 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனவும், 18 இராணுவத்தினரைக் காணவில்லை எனவும் காணாமல்போன இவ்இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

## இராணுவச் சடலங்கள்

## பிரச்சினைத் தீர்வுக்கு பலரது கருத்துத் தேவை

### அமைச்சரவைப் பேச்சாளர் ஹேரத்

(கொழும்பு)

கடந்த பத்து ஆண்டுகளில் இனப்பிரச்சினையை தீர்க்க

பதிலளித்த போது தெரிவித்தார்.

விவகாரங்களையும் ஆராய்ந்து நியாயமான தீர்வை எடுக்க

(கொழும்பு)

கடந்த பத்து ஆண்டுகளில் இனப்பிரச்சினையை தீர்க்க பலவழிகளில் அரசு முயற்சி எடுத்துள்ளது. புலிகளுடன் பேசினோம். பலகூட்டங்களை நடத்தினோம். எனினும் தீர்வு கிட்டவில்லை இதனால் பாதுகாப்பிற்கு பெருமளவு பணம் செலவிட நேரிட்டது. எப்படியிருப்பினும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அரசு இன்னமும் முயற்சிக்கின்றது. ஏனைய அரசியல் கட்சிகளும் இம்முயற்சியில் இறங்கியுள்ளன. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் ஹரல்ட் ஹேரத் கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்களின் கேள்விஒன்றிற்கு பதிலளித்த போது தெரிவித்தார்.

பத்திரிகையாளர்: அரசு உறுதியான தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்காதது ஏன்?

அமைச்சர்: பிரச்சினை சம்பந்தமாக பலரது கருத்துகளையும் அறிவதில் அரசு தற்போது ஈடுபட்டுள்ளது. மக்களின் உணர்வுகள், கருத்துக்களை அறிந்தால் தானே உரிய தீர்வையிட்டு சிந்திக்கமுடியும்

பத்திரிகையாளர்: இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இன்னும் எவ்வளவு காலம் செல்லும்?

அமைச்சர்: நாளையே தீர்வுகாண முடியும் என்றாலும் நல்லதே. ஆனால் பல விவகாரங்களையும் ஆராய்ந்து நியாயமான தீர்வை எடுக்க வேண்டியுள்ளதே ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டினுள் நின்று செயற்பட வேண்டியுள்ளது.

பத்திரிகையாளர்: பத்து வருட காலமாக பிரச்சினை உக்கிரமாக உள்ளது. 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனரே?

அமைச்சர்: பிரச்சினை நீடிப்பது சரியல்ல. ஆனால் தீர்வுதான் தாமதமாகிறதே.

பத்திரிகையாளர்: தீர்வுக்கு இந்தியாவின் உதவி கோரப்பட்டதா?

பேர்னாட் திலகரட்ன: எனக்கு தெரிந்த மட்டில்

(6ஆம் பக்கம் பார்க்க)

றும் மினிமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 52ஆக அதிகரித்துள்ளதாக ஜேர்மன் வானொலி நேற்றிரவு அறிவித்தது. லூஷியன் ராஜகருணா எழுதிய செய்தியில் இவ் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

# இராணுவச் சடலங்கள் இன்று ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பின் போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய 17 இராணுவத்தினரின் சடலங்கள் இன்று வவுனியாவில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி செல்வி எலிசபெத் இவ் இராணுவச் சடலங்களை புலிகளிடமிருந்து பொறுப்பேற்று தாண்டிக்குளம் முகாம் இராணுவத்திடம் ஒப்படைப்பார் என தெரியவருகிறது. (நி)

தெரிவிக்கின்றது.

# மாத்தறையில் வர்த்தகர்மீது தாக்கு

(கொழும்பு)

மாத்தறையைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர் ஒருவர் வெட்டுக் காயங்களுடன் மாத்தறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மணலாறு பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற முகாம் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரில் 16 பேர் மாத்

(6ஆம் பக்கம்பார்க்க)

மண்கிண்டி மலை முகாம் தகர்ப்பு

# நில அறையில் இருந்த அதிகாரி பலியானாராம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் மணலாறு மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பின்போது கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி நில அறை ஒனறினுள் வைத்தே கொல்லப்பட்டதாக கொழும்பு செய்தியாளரை மேற்கோள் காட்டி இந்திய வானொலி செய்தி வெளியிட்டது.

இந்த இராணுவ அதிகாரியும் வேறு 22 இராணுவ சிப்பாய்களும் இவ்வாறு நிலவறையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து புலிகள் இராணுவத்தினரின் வீடுகளையும் தாக்கி அழித்ததாகவும் இந்திய வானொலி மேலும் தெரிவித்தது.

மணலாறு தாக்குதலில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட 30 படையினர் கொல்லப்பட்டதாக கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாகவே ஒப்புக்கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# அரசு புலிகளுடன் பேச எதிர்க்கட்சிகள் தடை

## மன்சூர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத தீர்வுக்கு பேச்சுவார்த்தையே ஒரேவழி புலிகளுடன் பேசவேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு. ஆனால் அவர்களுடன் பேச வேண்டாம் என்று எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். இவ்வாறு வர்த்தகவாணிபத்துறை அமைச்சர் மன்சூர் பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகுறித்து ஏனைய சகல கட்சிகளும் இணக்கப்பாடு ஒன்றிற்கு வந்தால் அந்த இணக்கப்பாட்டை அமுலாக்க அரசு தயாராக உள்ளது என்றும் அமைச்சர் மன்சூர் மேலும் தெரிவித்தார்.

# மன்னாரில் இரு தடவை விமானக் குண்டு வீச்சு

(மன்னார்)

சிறிலங்காவின் விமானப் படைக் குண்டு வீச்சு விமானங்கள் மன்னாரில் இரு தடவைகளாக குண்டு வீச்சுத் தாக்குதல்களை நேற்று மேற்கொண்டன

நேற்றைய தினம் காலை 8 மணியளவில் மன்னாரிலுள்ள பரப்புக்கடந்தான் காட்டுப் பகுதியை வட்டமிட்ட குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதியில் குண்டுகளை வீசின.

மீண்டும் நண்பகல் 12 மணியளவில் பண்டிவிரிச்சான் காட்டுப்பகுதிக்கு வந்த குண்டு வீச்சு விமானங்கள் இரு குண்டுகளை வீசின. இதைத் தொடர்ந்து நண்பகல் 12.10 மணியள

(6ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ உத்தரவை மீறினாராம்

# பிரஜைகள் குழுத் தலைவர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலி

(மட்டக்களப்பு)

வாகரை பிரஜைகள் குழுவின் தலைவரான சின்னத்தம்பி சண்முகம் (59) கடந்த வாரம் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமானார். அண்மையில் வாகரைப் பகுதிக்கு வந்த படையினர் மக்களை இரவில்

[6ஆம் பக்கம் பார்க்க]

# கொழும்பே நாட்டில் பாதுகாப்பற்ற இடம்

## காமினி திஸ்ஸநாயக்கா

[கொழும்பு]

நாட்டின் ஏனைய பகுதிகளை விட கொழும்பு நகரில் தான் பாதுகாப்பு குறைவாக உள்ளது. எனவேதான் பாதுகாப்பு அமைச்சர்களாக இருந்த ரஞ்சன் விஜேரட்ண. லலித் அத்துலத்முதலி, ஜனாதிபதி பிரேமதாசா போன்றோர் பலியாகினர். இவ்வாறு காமினி திஸ்ஸநாயக்கா மஸ்கெலியாவில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்த நாட்டில் வடக்கு, கிழக்கு இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால்தான் உண்மையான அபிவிருத்தியை காண முடியும். வட-கிழக்கு போரிற்காக 25 ஆயிரம் மில்லியன் ரூபா வரையில் செலவு செய்யப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இம்மாத முடிவுக்குள் குடும்ப அட்டை பெறவும்

இதுவரை குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்தவர்களும், பூரணமாக விபரங்களைப் பதியாதவர்களும் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் உங்கள் பகுதிக் கிராம சேவகர்களிடம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

அத்துடன் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பப் பதிவு அட்டைகளை வைத்திருப்பவர்களும் அவற்றை இம்மாத இறுதிக்குள் கிராமசேவகரிடம் ஒப்படைப்பதன் மூலம் அநாவசிய சிரமங்களை தவிர்த்துக் கொள்ளலாம். மேலதிக விபரங்களிற்கு 19 06 1993 ஈழநாதம் பத்திரிகையைப் பார்க்கவும்.

# சர்வதேச செய்தி நிறுவனம் பெரும் முக்கியத்துவம்

[யாழ்ப்பாணம்]

மணலாற்றுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட இதய பூமி-1 தாக்குதல் நடவடிக்கை குறித்த செய்திகளுக்கு சர்வதேச தொடர்பு சாதனங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்தன.

அவுஸ்ரேலியா, ஜேர்மன், பிலிப்பைன்ஸ், லண்டன் வானொலிகள் இச்செய்திகளுக்கு முக்கியத்துவம் வழங்கின. ஜேர்மன் வானொலியில் லூஷியன் ராஜகருணா எழுதிய விசேட செய்தி அறிக்கையொன்று நேற்றிரவு ஒலிபரப்பாகியது.

## வரி விளம்பரம்

### திருத்திக் கொடுக்கப்படும்

தமிழ் ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதி பண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்பவல்லுநர்களால்குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொசலூட GR மருதலிங்கம் 8/1, E அப்பன் வீதி, கந்தர் மடம் யாழ்ப்பாணம் (5211)

### விற்பனைக்குண்டு

நல்லின பால்மாடுகள் (9 11, 14) போத்தல் பால் கறக்கக்கூடியன. விற்பனைக் குண்டு. தொடர்பு: அரசடி றோட், இருபாலை. (5544)

### உடன் விற்பனைக்குண்டு

ஒரு மாதம் வளர்ந்த கைலைன் பிறவுண் சேவல் குஞ்சுகள் இரண்டுகிழமை வளர்ந்தபுறொய்லர் குஞ்சுகள் உடன் விற்பனைககுண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (5539)

### தவறிவிட்டது

17-07-1993 அன்று மாலி சந்தி போக்குவரத்து கண்காணிப்பு அலுவலகத்துக்கு அருகாமையில் ப பிரபாகரனினதும் அவரின் சகோதரங்களினதும் நான்கு ஜாதகங்களுடன் கூடிய சிறிய கைப்பை ஒன்று தவறிவிட்டது. தயவு செய்து இதை கண்டெடுத்தவர்கள் கீழேயுள்ள முகவரிக்கு தகவல் தரவும் க. நல்லதம்பி, தல்லையப்புலம், கரவெட்டி. (3439)

### கருத்தரங்கு
(குருநகர்)

யாழ். பிரதான வீதி, திருமறைகலாமன்றக் கேட்போர் கூடத்தில் நாளை புதன் கிழமை மாலை 5 மணிக்கு பண்பாடு பற்றிய கருத்தரங்கு நடைபெறும். (21)

### பாரதிபாடசாலை முதலிடம்

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் ஆதரவுடன் இயங்கும் உரும்பராய் பகுதி பாலர் பாடசாலைகள் இணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

உரும்பராய் மேற்கு சந்திரோதய வித்தியாசாலை மைதானத்தில் சர்வோதய பிரதேச இணைப்பாளர் ...

தெல்லிப்பழை வைத்தியசாலை

## வெளிநோயாளர் பிரிவு இடமாற்ற நடவடிக்கை

மானிப்பாயிலுள்ள திருக்குடும்ப தியான இல்லத்தில் கடந்த ஒருவருட காலமாக செயற்பட்டுவரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு அங்கிருந்து வேறு கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது. இந்த வெளிநோயாளர்பிரிவை தொடர்ந்து நடாத்துவதற்கு வசதியான கட்டடம் கிடைக்காமல் இருப்பதாகவும் பொது நலன் விரும்பிகளும் பொது நல அமைப்புகளும் இது விடயத்தில் முயற்சி செய்து வைத்தியசாலையை தொடர்ந்து செயற்படுத்துவதற்கு உதவுமாறும் வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## நெஞ்சம் நெகிழ்ந்துருகல்

செல்வன்

**பேரம்பலம் சூரியகுமார்**

(மானிப்பாய் இந்து உயர்தர மாணவன்)

மலர்வு: 2-8-1974 உதிர்வு: 25-07-93

எம்முடன் ஒன்றாகி ஒடித்திரிந்த நண்பா
எம்முடன் வேறாகி இன்று
இறையுடன் சேர்ந்தாயோ.

உன் ஆன்ம ஈடேற்றத்திற்த
எம இதய அஞ்சலிகள்

– '95 வர்த்தக மாணவர்கள்

மானிப்பாய் இந்துக்கல்லூரி,
மானிப்பாய். (5540)

நல்லூரில் சுவைதேடும்

## உணவுப் பிரியர்களை ஜெசித்தாரா அழைக்கிறது

**ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா தனது சேவையை நல்லூரில் விஸ்தரிக்கின்றது.**

நல்லைக் கந்தன் எதிரே 24ஆம் திகதி ஆடி 1993ஆம் ஆண்டு முதல்

### சுவைச் சோலையில்

608/2, பருத்தித்துறை வீதி, (நல்லூர் கந்தன் முன்பாக) தனது ஏகோபித்த வாடிக்கையாளர்களின் நலன்கருதி சேவையை தொடர்கிறது.

நீங்களும் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்,

மரக்கறி / விரதச்சாப்பாடு
பார்சல் ரூபா 25/- மட்டுமே

பகல் 12.00 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.

ஜெசித்தாரா புதுயுகத்தில் புது உருவம்

(சி/7062)

## நினைவு கூருகின்றோம்... 1993-07-27

1983ஆம் ஆண்டு இதேதினத்தில் வெலிக்கடைச் சிறையில் சிறை அதிகாரிகளின் உதவியுடன் சிங்களக் காடையர்கள் இரண்டாவது தடவையாக மேற்கொண்ட நடவடிக்கையில் படுகொலை செய்யப்பட்ட -

❋ **சிறிக்குமார்** [முத்துக்குமார் சிறிக்குமார் - தேவாலய வீதி, உரும்பராய் கிழக்கு - யாழ் ]

இதே சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு மன்னார் - பூநகரி ஒல்லாந்தர் கோட்டையில் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய -

**மேஜர் அசோக்** (ராஜநாயகம் டேவிட் பாலச்சந்திரன் - மடு உயிலங்குளம் - மன்னார்)

**லெப். துரைமணி** [செபஸ்தியான் மிசிடன் எட்வேட் - முருங்கன் - மன்னார்]

**லெப். அலிபா** (அலஸ் யோசப் - நறுவிலிக்குளம், வங்காலை - மன்னார்)

**லெப். சேகர்** [செபமாலை சிறீதரன் - அடம்பன் - மன்னார்]

**2-ம் லெப். ரகு** [இராமசாமி விஜயகுமார் - வேப்பங்குளம், அடம்பன் - மன்னார்]

**செந்தூரன்** [சண்முகநாதன் தங்கேஸ்வரன் - 8-ம் கட்டை உயிலங்குளம் - மன்னார்]

**2-ம் லெப். பெரியதம்பா** [வின்செண்ட் பிரான்சிஸ் ஞானதீபன் - சென்ஜேம்ஸ் வீதி, இளவாலை - யாழ்]

வவுனியா - பெரியதம்பனைப் பகுதியில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட -

**தீசன்** [தம்பையா கணேஸ் - தம்பனை - வவுனியா]

1988ஆம் ஆண்டு யாழ் - காங்கேசன்துறையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது சயனைட் உட்கொண்ட நிலையில் மண்வெட்டியால் அடித்துக் கொலை செய்யப்பட்ட -

**லெப். ராஜு** [சிவஞானசுந்தரம் ஐங்கரன் - ஐங்கரன்வீதி அளவெட்டி - யாழ்]

1989ஆம் ஆண்டு முள்ளியவளை - தண்ணீரூற்று ஆலடிச் சந்தியில் இந்தியப் படையினருடனான சமரில வீரச்சாவெய்திய -

**குமரன்** [பிச்சை அன்பரசன் - அலம்பில் - மணலாறு]

காரைநகரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 03 தமிழர்கள். யாழ். கந்தர்மடச் சந்தியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

1990ஆம் ஆண்டு திருமலை - திரியாய்ப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**நிர்மல்** (அப்துல் நசார் - புடவைகட்டு - திருமலை)

**மோகன்** ( — — திருமலை)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 5 தமிழர்கள்.

மட்டுநகரில் இடம்பெயர்ந்தோர் முகாமொன்றில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன மாவடிவேம்பைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவில் ஆ. க. வெ. நடவடிக்கையின்போது தடைமுகாம் மீது 2ஆவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**நீசா** [சுமதி சதாசிவம் - 1-ம் குறிச்சி, தம்பிலுவில் - அம்பாறை]

**கப்டன் நிறையன்** [இராமமூர்த்தி விதுரன் - பன்குடாவெளி - மட்டு]

**லெப் வர்மன்** [பாஸ்கரமூர்த்தி சுந்தரமூர்த்தி - வாழைச்சேனை - மட்டு]

**லெப். சத்தியகுமார்** [பொன்னையா சிவனேசராசா - திருப்பழுகாமம் - மட்டு]

**லெப். பாரதி** [நவரட்ணம் கோபாலப்பிள்ளை - செட்டிப்பாளையம் - மட்டு]

**2-ம் லெப். ஜெயந்திரன்/ஜெயச்சந்திரன்** [கந்தப்பர் தவ...

## துப்பாக்கி முனையில் கைதி மீட்பு

(கொழும்பு)

திருட்டு வழக்கொன்று தொடர்பாக களுத்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வெலிக்கடைச் சிறை கைதியொருவர் சிறைக்கு திருப்பி அழைத்து வரப்படும் போது களுத்துறை புகையிரத நிலையத்திலிருந்து துப்பாக்கி ஏந்தியவர்களால் சிறைக்காவலருடன் கடத்திச் செல்லப்பட்டார்.

சிறைக்காவலர் இருவரு பின்னர் தெகிவளையில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர் சிறைக்காவலர்கள் கொடுத்தாரின் இலக்கதகதை வைத்த பொலிசார் காரையும் கடத்தல் காரரையும் கைதியையும் தேடி வருகின்றனர்.

## மிதி வெடியில் கால் இழப்பு

பெரிய விளான் மற்றும் சிறு விளான் ஆகிய பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரினால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதி வெடியில் சிக்கி ஒருவர் காலை இழந்துள்ளார்

பெரியவிளானைச் சேர்ந்த ஆர் பத்மநாதன் (47வயது) என்பவரே தனது காலை இழந்தவராவார்.

இவர் நேற்றுக்காலை விளானில அமைந்துள்ள தனது வீட்டைப்பார்க்கச் சென்ற சமயம் அங்கு இராணுவத்தினரினால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது [பா]

**லெப். சபா** (மாரிமுத்து பத்மநாதன் . பள்ளக்கால் - குண்டகசாலை)

**லெப். கேணல் சரா** (சின்னத்துரை ஜீவராசா - அல்வியங்காடு - யாழ்)

**மேஜர் குகதாஸ்** (இராசரத்தினம் இராஜேந்திரன் - உரும்பராய் வடக்கு - யாழ்)

**மேஜர் சொனி** (சிவஞானசுந்தரம் அசோகன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**கப்டன் ரகீம்** (ஜசாக் டொனால்ட் வீரயாகு - அளவெட்டி தெற்கு - யாழ்)

**கப்டன் நிதி** (இரத்தினம் இலங்கேஸ்வரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ்)

**கப்டன் கீர்த்தி** (வீரப்பிள்ளை கனகேஸ்வரன் - கொடிகாமம் - யாழ்)

**கப்டன் அல்பேட்** (கந்தசாமி வன்னியசிங்கம் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

**கப்டன் சௌகான்** [சிவானந்தன் ஜோய் அன்ரனி - பற்றிமா வீதி, பண்டத்தரிப்பு - யாழ் ]

**கப்டன் சிவம்/பவான்** [திருப்பரங்கிரிநாதன் நெல்லைநாதன் உடுப்பிட்டி - யாழ் ]

**கப்டன் வினோத்** [கனகராசா பிரபாகரன் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி - யாழ் ]

**லெப். உமாசங்கர்/ரவி** [சின்னமணி கென்சியஸ் 8/3, குரு நகர் வீதி - யாழ் ]

**லெப். நிமலேந்திரன்/பிரசன்னா** [தங்கவேல் செந்தில்குமரன் - வல்வெட்டித்துறை - யாழ்.]

**லெப். அன்பு** [பாலச்சந்திரன் றமணன்-அரசடிஒழுங்கை தும்பளை, பருத்தித்துறை - யாழ் ]

**லெப் வினோத்** (தர்மலிங்கம் தயாளன் - திக்கம் அல்வாய், பருத்தித்துறை - யாழ் ]

**லெப். கேசியன்** [பரஞ்சோதிநாதன் நியூற்றன் பிரன்சிஸ் - பண்டத்தரிப்பு - யாழ் ]

**லெப். நெல்சா** (சரோசினிதேவி சின்னக்குட்டி - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ் )

**2-ம் லெப்.மதனா** (சிவமலர் தளையசிங்கம் - கைதடி, நுணாவில், சாவகச்சேரி, - யாழ்.]

**2 ம் லெப்.ஜசீர்மா** (சிவலோஜினி சிவானந்தையர் - அல்வாய் மேற்கு, திக்கம் - பருத்தித்துறை)

**2-ம் லெப். கந்தன்** (டானியல் ராஜ்குமார் - அல்வாய் வடக்கு, பருத்தித்துறை - யாழ்.)

**2-ம் லெப் வாணன்/குமார்** (நடேஸ் ஜெயக்குமார் - சமாதியடி, உரும்பராய் வடக்கு - யாழ்.)

**2-ம் லெப் மயில்வாகனம்** [சின்னத்தம்பி சுந்தரலிங்கம் - பழையதோட்டம் - வல்வெட்டித்துறை]

**2 ம் லெப்.அல்பேட்** (நடராசா கலைச்செல்வன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

**2 ம் லெப். விக்கி** (இரத்தினம் சாந்தவேல் -கெருடாவில், தொண்டமானாறு - யாழ்)

**2-ம் லெப். ஆனந்தன்** ...

நடைபெறும். (21)

## பாரதிபாடசாலை முதலிடம்

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் ஆதரவுடன் இயங்கும் உரும்பராய் பகுதி பாலர் பாடசாலைகள் இணைந்து நடாத்திய விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

உரும்பராய் மேற்கு சந்திரோதய வித்தியாசாலை மைதானத்தில் சர்வோதய பிரதேச இணைப்பாளர் செல்வி இ. பத்மாவதி தலைமையில் நடைபெற்ற மேற்படி விளையாட்டுப் போட்டிகளில் பாரதி பாலர் பாடசாலை முதலாம் இடத்தையும், அர்ச்சுனா பாலர் பாடசாலை இரண்டாம் இடத்தையும், நவசக்தி பாலர் பாடசாலை மூன்றாம் இடத்தையும் பெற்றன. (41)

## உலங்கு வானூர்தி நோட்டம்

சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று நேற்று நண்பகல 12-15 மணியளவில் யாழ் நகரின் வான்பரப்பிலும், நகர்ப்புறத்தை அண்மித்த பகுதிகளிலுமுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீதும் தாழப் பறந்து பலமுறை வட்டமிட்டு நோட்டம் இட்டுச் சென்றது.

மேற்படி உலங்கு வானூர்தி நல்லூர்ப் பகுதியில் ஆலய உற்சவத்தினையிட்டு அங்கு பெருந்திரளான மக்கள் வழிபாட்டிற்காக செல்வதனையும் அவதானித்து சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (41)

## இலவச வகுப்பு

(தொல்புரம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் தொல்புரம் பாபு கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் பகல் நேர இலவச பாட வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பகல் நேர வகுப்புக்கள் பாடசாலைப் பரீட்சை காரணமாக நடைபெறாதிருந்த போதிலும் எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் 5 45 மணிவரை தினமும் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் ஆண்டு 1 முதல் ஆண்டு 13 வரையிலான பாடசாலை மாணவ, மாணவியர்க்கு இலவசமாக பாடங்கள் கற்பிக்கப் படவுள்ளதென தெரிவிக்கப் படுகிறது. (41)


நீங்களும் முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தை தவிர்க்கவும்,

மரக்கறி / விரதச்சாப்பாடு
பார்சல் ரூபா 25/- மட்டுமே

பகல் 12.00 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா
சுண்டிக்குளி மகளிர் முன் ஒழுங்கை, சுண்டிக்குளி.
ஜெசித்தாரா புதுயுகத்தில் புது உருவம்

(சி/7062)


## நீங்காத நினைவுகளுடன் வாழும் அன்பு அண்ணருக்கு அஞ்சலி



### லெப். கேணல் சரா

(சின்னத்துரை ஜீவராசா)

பிறப்பு 19 04 1962 — வீரச்சாவு 27-07-1991

உங்களுடன் பழகிய நண்பர்கள்
தோழர்களின் நெஞ்சிலும் ஒவ்வொரு
வார்த்தைகளிலும் தினம், தினம்
நினைவு கூருகிறார்கள்
நீங்கள் இறக்கவில்லை தினம் தினம்
ஜீவித்துக் கொண்டிருக்கிறீர்கள்

கல்வியங்காடு. [5542] — மனைவி மானா

வடிகளையின்போது தலைமுகாம் மீது 2ஆவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

நீசா [சுமதி சதாசிவம் - 1-ம் குறிச்சி, தம்பிலுவில் - அம்பாறை]
கப்டன் நிறையன் [இராமமூர்த்தி விதுரன் - பன்குடாவெளி - மட்டு]
லெப் வர்மன் [பாஸ்கரமூர்த்தி சுந்தரமூர்த்தி - வாழைச்சேனை - மட்டு]
லெப். சத்தியகுமார் [பொன்னையா சிவனேசராசா - திருப்பழுகாமம் - மட்டு]
லெப். பாரதி [நவரட்ணம் கோபாலப்பிள்ளை - செட்டிப்பாளையம் - மட்டு]
2-ம் லெப். ஜெயந்திரன்/ஜெயச்சந்திரன் (கந்தப்பர் தவராசா - களுவாஞ்சிக்குடி - மட்டு)
2 ம் லெப். நளினன் (நாகராசா சிவகுமார் - தன்னாமுனை - மட்டு)
2-ம் லெப். கஜன் (கோபாலப்பிள்ளை புஸ்பராஜா - ஈச்சிலம்பத்தை - மட்டு)
வரதன் (மாசிலாமணி மகேந்திரன் - பதுளை வீதி, பெரிய புல்லு மலை ஏற்றம் - மட்டு)
ஆனந்தபாபு (தங்கராசா நடராசா - துறைநீலாவணை - மட்டு)
புருஸ்லி/மூர்த்தி (சீவரத்தினம் சின்னவன் - தாளையடி வீதி, சித்தாண்டி - மட்டு)
கப்டன் சத்தியராஜ் (கந்தையா சத்தியசீலன் - நிலாவெளி - திருமலை)
2 ம் லெப். சுந்தரி (சுஜிதா தேவநாயகம் - நிலாவெளி - திருமலை)
2 ம் லெப். நிதி (செல்வநயினார் சுந்தர்ராஜன் - கும்புறுப்பிட்டி - திருமலை)
2 ம் லெப். நிருபன் (வேலாயுதம் பாலச்சந்திரன் - ஆலங்கேணி, கிண்ணியா - திருமலை)
கரன் [வேலாயுதம் சிவனையா - கங்குவேலி, மூதூர் - திருமலை]
மொரார்ஜி (அரசரட்ணம் அரவிந்தன் - மூதூர் - திருமலை)
சுனித்தா (குஸ்மாவதி கருணாகரன் - குச்சவெளி - திருமலை)
ஜஸ்மின் (செல்வமலர் கோபாலப்பிள்ளை - பன்குளம் - திருமலை)
2 ம் லெப். இளவரசி (சந்திரபவானி சிவப்பிரகாசம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)
பிரதீபா (ஜெயந்தி பெரியதம்பி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)
காயத்திரி (உமாதேவி சந்திரசேகரம் - விசுவமடு - முல்லைத்தீவு)
திசில் (தங்கையா சேரன் - டி. 7 திட்டம் - கிளிநொச்சி)
காண்டீபனி (சுகந்தினி வேலாயுதம் - கண்டாவளை - கிளிநொச்சி)
சுகந்தினி (யோகா கணபதிப்பிள்ளை - பம்பைமடு - வவுனியா)
சகீந்தா (சூரியகுமாரி சுப்பிரமணியம் - பம்பைமடுச்சந்தி - வவுனியா)
லெப். குட்டி (செபஸ்தியம்மா அலோசியஸ் - வங்காலை - மன்னார்)
2-ம் லெப். மெடினா/மெடோனா (செல்வராணி மாயழகன் - பூநகரி - மன்னார்)
2-ம் லெப் வதனி (ஹென்சி பத்திநாதன் - தாழ்வுபாடு - மன்னார்)
பவா (கதிரித்தம்பி கணேசலிங்கம் - நல்லூர், பூநகரி - மன்னார்)
பிருந்தன் (சின்னராசா ஜெராட் திலகர் - நானாட்டான் - மன்னார்)
கில்பேட் (ஞானராசா ஞானதீபன் - இலுப்பைக்கடவை - மன்னார்)

நுணாவில், சாவகச்சேரி - யாழ்.]
2 ம் லெப். ஜசீர்மா (சிவலோஜினி சிவானந்தையர் - அல்வாய் மேற்கு, திக்கம் - பருத்தித்துறை)
2-ம் லெப். கந்தன் (டானியல் ராஜ்குமார் - அல்வாய் வடக்கு, பருத்தித்துறை - யாழ்.)
2-ம் லெப் வாணன்/குமார் (நடேஸ் ஜெயக்குமார் - சமாதியடி, உரும்பராய் வடக்கு - யாழ்.)
2-ம் லெப் மயில்வாகனம் [சின்னத்தம்பி சுந்தரலிங்கம் - பழையதோட்டம் - வல்வெட்டித்துறை]
2 ம் லெப். அல்பேட் (நடராசா கலைச்செல்வன் - தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)
2 ம் லெப். விக்கி (இரத்தினம் சாந்தவேல் - கெருடாவில், தொண்டமானாறு - யாழ்)
2-ம் லெப். ஆனந்தன் [கந்தசாமித்துரை ராஜவேல் - வேம்படி, வல்வெட்டித்துறை - யாழ்]
திசைவீரன் (சற்குணநாதன் சற்குணேசன் - கச்சாய்வீதி, கொடிகாமம் - யாழ்)
ரகீம்/ சகீம் (நாகலிங்கம் ஜெகதாஸ் – செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்)
வேலுப்பிள்ளை [யூனியன் கந்தையா கந்தசாமி - சாவகச்சேரி - யாழ்]
கிர்மானி (ஜோன் எட்வேட் கெனடி - 64/1, மவுண்கார் மேல் வீதி, குருநகர் - யாழ்)
பீலிக்கஸ் [அருளானந்தம் ரொனால்ட் ஆனந்த் - தொட்டுவை, பலாலி - யாழ்]
ராஜன் [குமாரசாமி குணராசா - கேணியடி, கொக்குவில் மேற்கு - யாழ்]
கார்த்திகா [மேரிகலிஸ்ரா சூசைப்பிள்ளை - 16, சென் மேரீஸ் வீதி, நாவாந்துறை வடக்கு - யாழ்]
அன்பினி [விஜிதா சிவண்டி - கரணவாய் தெற்கு, கரவெட்டி - யாழ்]
கிகிலா (ரஞ்சினி நடராசா - தொல்புரம் மத்தி, சுழிபுரம் - யாழ்]
தங்கமணி [புஸ்பகலா நடராசா - கரவெட்டி கிழக்கு - யாழ்]
டட்லியா [வரலட்சுமி தேவசிகாமணி - வல்வெட்டித்துறை - யாழ்]
யாழ்மொழி (விஜயலதா பாக்கியநாதன் - போயிட்டி, இளவாலை - யாழ்)

மட்டு வாகரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

விவே [பெர்ணான்டோ உதயராஜ் - ஆரையம்பதி - 03 - மட்டு]

1992ஆம் ஆண்டு மணலாறு - நித்தியவெட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய -

லெப். உலகேஸ்வரன் கமல் (தேவதாசன் மோசஸ் - கரடியனாறு - மட்டு)
லெப். இயல்வாணன்/இதயன் [ஜோசப் ஜெயச்சந்திரன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

❋ இக்குறியிடப்பட்ட மாவீரர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சாராமல் இம்மண்ணின் மீட்பிற்காய் போராடியவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-7080)

**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 94** (1 வருட வகுப்பு)

பொருளியல் - S. வரதராஜன்

பொருளியல் I மீட்டல்
பொருளியல் II பாடத்திட்டம் - வரவுசெலவுத் திட்டம்

ஆரம்பம்: **01.08.93** ஞாயிறு 11.00 A.M.

**A/L 95 புதிய பிரிவு**

பொருளியல் - S. வரதராஜன்
உற்பத்தி இயல்தகவுவளையி

ஆரம்பம்: **01.08.93** ஞாயிறு 1.00 P.M.

(சி/7082)

# கட்சி நீக்கியதற்கு எதிராக கருணாரட்ன மனு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உட்கட்சி நிர்வாகம் எந்த ஒரு தனிப்பட்டவரின் சர்வாதிகாரத்திற்கு உட்பட்டதாக இருப்பதோ தனிப்பட்டவர்களைக் கொண்ட ஒரு குழுவினரின் ஆட்சியாக இருப்பதோ எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கவின் கொள்கைகளுக்கும் கட்சி யாப்பிற்கும் விரோதமானவை என சுதந்திரக் கட்சியிலிருந்து தன்னை வெளியேற்றியமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள தமது மனுவில் ஹெல உறுமய தலைவரும் எம். பி. யு. மான திலக் கருணாரட்ன குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட கட்சியின் 37 பேரை அவர் இம்மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார். 1982ஆம் ஆண்டிலிருந்து மனு ராரான தாம் கட்சி உறுப்பினராக இருப்பதாகவும் 1984 தேர்தலில் பலாங்கொடை தேர்தல் தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதாகவும் திலக் கருணாரட்ன தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

1990 இறுதிப் பகுதியில் ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்தில் முதலாவது பிரதிவாதியான சிறிமாவோ பண்டாரநாயக்கவை சந்தித்த மனுதாரரான திலக்கருணாரட்ன திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவியிலிருந்து இறங்க இதுவே உகந்த நேரம் என்று தெரிவித்தார்.

1991 அக்டோபர் 9ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஸ்ரான்லி திலகரட்ன எம். பி. கட்சியை கண்டித்ததோடு ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு பிரேரணை கொண்டு வரப்பட்ட போது கட்சி நடந்து கொண்ட முறை குறித்தும் விமர்சித்திருந்தார் எனினும் அவர் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்ட போதிலும் எவ்வித மான ஒழுக்க நடவடிக்கையும் இன்றி அவர் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். இதே போன்று சந்திரிகா குமாரணதுங்கவும் பல அறிக்கைகளை வெளியிட்ட போதிலும் அவர் கட்சியின் மத்திய குழு உறுப்பினராக சிறிமாவோவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

1992ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பத்திரிகை பேட்டி ஒன்றில் கட்சியின் தலைமைப் பீடத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என மனுதாரரான திலக்கருணாரட்ன கூறினார். இதனையடுத்து ஒக்டோபர் 16ஆம் திகதி இவரை கட்சியிலிருந்து இடை நிறுத்தம் செய்யும் உத்தரவுக் கடிதம் சிறிமாவோவினால் அனுப்பப்பட்டது தன்னை கட்சியிலிருந்து வெளியேற்றியது சட்டவிரோதமானது என தீர்ப்பளிக்குமாறு மனுதாரர் தம் மனுவில் கோரியுள்ளார்.

## இலக்கத்தகடு விநியோகம்

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்தினால் துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவ் இலக்கத்தகடுகளை காரியாலய நேரத்தில் சுழிபுரம் உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [41]

# வலைப்பந்தாட்டப் போட்டி பரு. மெதடிஸ்ற் முதலிடம்

யாழ். மாவட்டப் பாடசாலைகள் வலைப்பந்துச் சுற்று இறுதிப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டிகளில் 17வயதுப் பிரிவில் 3ஆம் இடத்தை யாழ். சண்டிலிப்பாய் மகாவித்தியாலயமும், 2ஆம் இடத்தை யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயமும் பெற்றுள்ளன. முதன்மை அணியாக யாழ். பருத்தித்துறை மெதடிஸ்ற் மகளிர் கல்லூரியும் வந்துள்ளது.

19 வயதுப் பிரிவில் 3ஆம் இடத்தைப்பெற்ற அணி யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும், 2ஆம் இடத்தை உடுவில் மகளிர் கல்லூரியும் பெற்றுள்ளன. முதன்மை அணியாக யாழ். பருத்தித்துறை மெதடிஸ்ற் மகளிர் கல்லூரியும் வந்துள்ளது.

17 வயதுப் பிரிவு முதன்மை அணிக்கு கப்டன் வானதி நினைவு சுற்றுக் கேடயமும், 19 வயதுப் பிரிவு முதன்மை அணிக்கு மேஜர் பாரதி வெற்றிக் கேடயமும் விரைவில் நடைபெறவிருக்கும் விளையாட்டுவிழா இறுதி வைபவத்தில் வழங்கப்படும். இந் நினைவு வெற்றிக் கேடயங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வழங்கியிருக்கின்றது.

இரண்டு பிரிவுகளிலும் முதன்மை அணிகளாக பருத்தித்துறை மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதுச்செட்டித் தெருவில் 28 பேர் பொலிசாரால் கைது

[கொழும்பு]

கொழும்பு புதுச்செட்டித் தெருப் பகுதியில் கடந்த வாரம் பொலிசார் கடும் தேடுதல் நடவடிக்கையைமேற்கொண்டனர் அதிகாலை4மணியளவில் இப்பகுதியை சுற்றிவளைத்த பொலிசார் வீடு வீடாக சோதனை நடத்தினர்.

இத்தேடுதலின் போது 7 பெண்கள் உட்பட 28பேர் பொலிசாரால் விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர். பொலிசாரால் கைதான இவர்கள் கொழும்பில் பொலிசாரிடம் பதிவு செய்யாமல் தங்கியிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



# மேஜர் குகதாஸ்

**[இராசரத்தினம் இராஜேந்திரன்]**

தமிழ் மண்ணில் தமிழர் மனங்களில்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு:
14-08-1971

வீரச்சாவு:
27-06-1993

# மேஜர் நளன்

(தர்மரட்ணம் விஜயகுமார்)

[கொம்மாதுறை - மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவில் கங்கையில் 27.06.1993 அன்று எமது முகாமை சுற்றிவளைத்த சிறிலங்கா ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்தார்.

கொம்மாதுறையில் இருந்து
மற்றொரு புலி மானங்காக்கப் புறப்பட்டான்.
அறிவிலும் வயதிலும் முதிர்ந்து பாண்டித்தியம்
பெற்ற பண்டிதரில்லை அவன்.
எமது பயணத்தின் வழிகாட்டி: நேற்று

# மேஜர் குகதாஸ்

## [இராசரத்தினம் இராஜேந்திரன்]

தமிழ் மண்ணில்
1964-09-26

தமிழர் மனங்களில்
1991-07-27

குன்றா ஒளி தந்த குகதாசன்
போகும் வழி எங்கும்
புகழ் குன்றா ஒளியோடு
திக்குகள் எட்டும்
பொட்டென நடுங்கிடவே
கக்கும் குருதிக்
கடலதுவின் நடுவினிலே
துட்டர் பயப்படச்
சிட்டாய்ப் பறந்தவனே!
வீட்டின்ப வாழ்வை வெறுத்து
நாட்டினைக் காத்திடவே
மவட்டுக்கள் நெஞ்சைதி
தொட்டு முத்தம் தந்திடவே
தங்கத் தமிழினத்தின்
தாகம் தணித்திடவே
வேங்கையாய் நீயும் நின்று
வீரகாவியம் படைத்தனையோ!
குகதாசா - நிந்தனது
அகத் தூய்மையினை உந்தன்
முகத்தில் கண்டோமே
மகத்தான உந்தன் வீரம்-இந்த
செகத்தினிலே யார் படைப்பார்!
யுகம் தோன்றும் உன் நினைவு-மக்கள்
அகத்தினில் வாழுமல்றோ!
ஆனையிறவு அகன்று கிடந்தது - அங்கு
ஆமைகள் போல் ஆமி முடங்கிக்கிடந்தது
சேனைகள் அங்கே குவிக்கப்பட்டது
செம்மறி ஆடு போல் சேர்ந்து கிடந்தது
அது கண்டு நீயும் ஓர் நாள்
சினந்தெழுந்து போர் தொடுத்தாய்
சட்டச் சடசட வெனக்
கொட்டும் குண்டு மழையினிலே
துட்டரின் வஞ்சகத்திட்டத்தை
வெட்டி நீயும் வேரறுத்தாய்
ஓங்கி வளர்ந்த உந்தன்
உன்னத வீரம் கண்டு
பொங்கி வந்த துட்டச்
சிங்கப் படையினரும் - எங்கள்
தங்கத் தரணியிலே
சாய்ந்து மடிந்தனரே!
வீரத்தோடு வேகமும் கொண்ட
தீரன் நீயும் இன்று-எம்மை
சோகத்தில் ஆழ்த்தி விட்டு
சென்ற இடம் எவ்விடமோ?
ஆறாது மாறாது வெம்பி
அழுதாலும் தீராது - என்றும்
உன் ஆத்மா சாந்தியடைய
அரவணைப்போம் உனதன்பை

கல்லூரி வீதி,
உரும்பராய் வடக்கு. (5530)

குடும்பத்தினர்
நண்பர்கள்



# 2-ம் லெப். ஆனந்தன்

## (கந்தசாமித்துரை இராஜவேல்)

பிறப்பு:
11-06-1970

வீரச்சாவு:
27-07-1991

காரிருளை நீக்கி ஒரு கனலாய் எழுந்தாய்
ஓரினத்தின் விடிவுக்காய் செருக்களம் புகுந்தாய்
புலியானாய் – பெரும் புயலானாய்
புவிமீதில் அழியாத புகழானாய்.

ஆனையிறவுப் போரில் வீரச்சாவை அணைத்துக் கொண்ட இவரையும் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்களையும் இந்நாளில் நினைவு கூருகிறோம். 27-07 93 இன்று மாலை இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு போராளிகளையும், நண்பர்களையும், உறவினர்களையும் அழைக்கின்றோம்.

வேப்படி,
வல்வெட்டித்துறை. (5535)

குடும்பத்தினர்.

ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்தார்.

கொம்மாதுறையில் இருந்து
மற்றொரு புலி மானங்காக்கப் புறப்பட்டான்.
அறிவிலும் வயதிலும் முதிர்ந்து பாண்டித்தியம்
பெற்ற பண்டிதரில்லை அவன்.
எமது பயணத்தின் வழிகாட்டி; நேற்று
வானில் முளைத்த விடி வெள்ளி.
மண் மீதும, மக்கள் மீதும் கொண்டொருபற்றுதலால்;
இந்த மண்ணுக்கு உரமாகிப் போயவன் ஒருமாதம்.
தமிழ் தாயை விடுவிக்க தன்னுயிரை விட்டவன்.
தவிகரும் உன் தாயைக் காண நீ மீண்டும் வரவேண்டும்.
அதுவரை உன் அடி தொடர்வோம்.
இந்த மண் மீது சத்தியம்!

- கிங்ஸ்லி -

– குடும்பத்தினர், நண்பர்கள்.

கிருஷ்ணன் வீடமைப்புத்திட்டம்,
உடையார் கட்டு,
கிளிநொச்சி (சி-7085)

# 2-வது ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் வினோத்

[கனகராசா பிரபாகரன்]

பிறப்பு
02-07-1971

வீரச்சாவு
27-07-1991

மண்ணிலே மரணம் ஒருநாள் வரும்
மண்ணை நேசித்த நீ
மரணத்தைக் கண்டு பயப்படவில்லை
மாறாக அந்த மண்ணிற்கே வித்தானாய்
கதி கலங்கி நாம் அழுதாலும்
மதி மயங்கவில்லை மகனே-உன்
வீரத்தை எண்ணி வியக்கின்றோம்-மா
வீரனாய் உன்னை நயக்கின்றோம்.

கீதன் வீதி,
மட்டுவில் கிழக்கு
சாவகச்சேரி, (5534)

உந்தன் நினைவுடன்
எந்தநாளும்
வினோத் குடும்பம்.

## அறிவித்தல்

லங்கா சோல்ட் லிமிட்டட்–வட பிராந்தியம் சேவையிலிருந்து சுயவிருப்பத்தின் பேரில்

### இளைப்பாறுதல்

சுய விருப்பத்தின் பேரில் சேவையிலிருந்து இளைப்பாற விரும்புவோரிற்கு நஷ்டஈடு எந்த அடிப்படையில் வழங்கப்படும் என்ற சுற்றறிக்கை நிருபம் தலைவரால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ் விடயத்தை சகல நிரந்தர ஊழியர்களின் கவனத்திற்கு அறியத் தருவதோடு, இது விடயமாக இறுதி முடிவு எடுப்பதற்கு சகல ஊழியர்களும் 30-07-93 வெள்ளிக்கிழமை தவறாது பிராந்திய செயலகத்திற்த சமுகம் கொடுக்கவும்.

லங்கா சோல்ட் லிமிட்டட்,
வடபிராந்தியம்,
மிருசுவில்.
26-07-93.

(சி-7079)

தி. ஸ்ரீஇராமநாதன்
பிராந்திய முகாமையாளர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2-ம் லெப். அல்பேட்

[நடராசா கலைச்செல்வன் (பாபு)]

தாயின் மழலையாக 28 5-1968

மண்ணின் மாவீரனாக 27 7-1991

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வனே!
தரணியிலே வந்துதித்த வீரமைந்தனே!
தணியாத தாகம் தான் நீ கொண்டனையோ!
ஈராண்டு சென்றாலும் தாங்காது எம் இதயம்.

இவருக்கும் இவருடன் ஆனையிறவில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.


கலைவாணி வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

(5437)

இவரது பிரிவால் வாடும்,
க. நடராசா
குடும்பத்தினர்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கேணல் சரா

[சின்னத்துரை ஜீவராசா]

மலர்வு: 19-04-1962 உதிர்வு: 27-07-1991

ஆனையிறவு அரக்கர் தம் சாக்காட்டில்
தானைத தலைவன் சராவை நாமிழந்து
ஆண்டிரண் டாளாலும் ஐயாவை தேடுகின்றோம்

G P. S. Road,
கவியங்காடு.

(சி/7076)

பெரியம்மா, தாய், தகப்பன்
சகோதராகள், மைத்துனர்கள்,
மருமக்கள்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நாவற்குழி அ. த. கவில் ஆங்கில ஆசிரியர் இல்லை

[தென்மராட்சி]

கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலையில் ஆண்டு -1 முதல் ஆண்டு 8 வரையில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு, ஆங்கில ஆசிரியர் என்று ஒருவர் இன்னும் நியமிகசுப்படவில்லை. இதனால் அப்பாடசாலையின் மாணவர்கள் ஆங்கில பரீட்சையில் ஒன்றும் எழுத முடியாமல் கவலையுடன் திரும்பியதாக பெற்றோர் கூறுகின்றனர்.

இதேவேளை அப்பாடசாலையில் 282 மாணவர்கள் மொத்தமாக கல்வி பயின்று வருகின்றனர். இருந்தும் அங்கு அதிபரை விட (4) நான்கு ஆசிரியர்கள் மட்டுமே கல்விபோதிக்கின்றனர் இதனால் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது அத்தோடு இடநெருக்கடியும் நிலவுகின்றதாக பெற்றோர் கூறுகின்றனர். (86)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப. உமாசங்கர் - ரவி

(சின்னமணி கன்சியஸ்)

தாயின் மடியில்: 27-08-1978

தாயக மண்ணில்: 27-07-1991

ஆனையிறவுக் களமதில் காவியமாகிய
- எம் செல்வமே
தலைவன் வழியில் வீரமுடன் வீறு
- நடை போட்டவனே
குருநகரின் வீரமதை எடுத்துக்
- காட்டி நின்றாய்
பார்த்து மகிழ நீ இல்லையே என
- இதயம் துடிக்குதே
தூயவனே உன் வழியில் விரைவில்
- ஈழம் மலரும்!

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

8/3, லெப். உமாசங்கர் வீதி,
(மத்திய கிழககு வீதி,)
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(சி-7081)

## வேலிகள் எரிப்பு

எருவில் என்னும் பகுதியில் கடந்த சில கிழமைகளாக இரவுவேளைகளிலஇனம் தெரியாத நபர்கள் கோஷ்டி ஒன்று தொடர்ந்து இரவில் வேலிகளை எரித்து வருகின்றது. இதனால் அப்பகுதி மக்கள் நித்திரை கொள்ளாது காத்திருந்தவேளை வேறு ஓர் இடத்தில் வேலி எரிக்கப்பட்டுள்ளது. இப்படி இச்சம்பவம் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. இதனால் வேலி வீட்டுக்காரர் கவலைதெரிவிக்கின்றனர். (86)

### மருந்து வகைகள் வந்து சேர்ந்தன

சாவகச்சேரி மருத்துவமனைக்கு முக்கியமான மருந்து வகைகள் வந்துசேர்ந்தன.

அங்கு முக்கியமான மருந்துகள் இல்லாமல் இருந்ததால் நோயாளிகள் தனியார் கடைகளில் வாங்கும் நிலை ஏற்பட்டு இருந்தது. எனினும் தற்போது முக்கியமான மருந்ம் வகைகள் ஒரு பகுதி வந்து சேர்ந்தமையால் நோயாளிகள் கஷ்டம் நீக்கப்பட்டது.

### ஒரு லட்சம் மாணவர் தோற்றுவர்

எதிர்வரும் 2-ம் திகதி ஆரம்பமாகும் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 1,45,000 மாணவர்கள் தோற்றுகின்றனர். இவர்களில் 98,500 பேர் பாடசாலை மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சனசமூக நிலையத்தின் முக்கிய பங்காளியும், தீவிர உழைப்பாளியுமான திரு. கனகசபை நடராசாவின் பாரியாரான அரசடி நெல்லியடியைச் சேர்ந்த திருமதி கமலாம்பிகை நடராசாவின் 21-07-1993இல் நிகழ்ந்த மரணத்தை யொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

–நிர்வாகிகள்
யார்க்கருசனசமூக நிலையம்
கரவெட்டி கிழக்கு.

(3440)



## லெப். ராஜு

(சிவஞானசுந்தரம் ஐங்கரன்)

தாயின் மடியில்: 28-05-1968

தமிழீழ மண்ணில்: 27-07-1988

சமர்கள் பலகண்டு சாதனைகள் புரிந்து நின்றாய்
சளுக்கர் தம்உயிர் குடித்து சரித்திரம் பொறித்து நின்றாய்
சதிகாரர் கறைபடிந்த கரம்பட்டால் களங்க மென்றே
சஞ்சீவி சயனந்தானே சிரஞ்சீவி என்று கொண்டாய்
கடுஞ்சிறை வைத்துக் காலர் உயிர்வதைசெய்தார்உன்னை
படுந்துயர் பட்டபோதும் பாதகர் விலங்குடைத்தாய்
படைகண்ட பாரதத்தார் பாவிகள் பலரைக் கொன்றாய்
பற்றிய பகைவர் கூட்டம் பலதிசை சூழ்ந்த போது
சஞ்சீவி சயனந்தானே சிரஞ்சீவி என்று கொண்டாய்.

"ஞானகிரி"
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

(5406)



## மேஜர் சொனி

(சிவஞானசுந்தரம் ஆசோகன்)

வல்வை நகரில் தோற்றம் 28-11-1967

ஆனையிறவில் வீரச்சாவு 27-07-1991

சிற்றின் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுஉள னோஎன வினவுதி என் மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியே னோரும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

-புறம்: 86 -

இழையணிப் பொலிந்த ஏந்துகோட் டல்குல்
மடவரல் உண்கண் வாள்நுதல் விறலி
பொருநரும் உளரோ நும் அகன்றலை நாட்டென
வினவல் ஆனாப் பொரு படை வேந்தே!
எறிகோல் அஞ்சா அரவின் அன்ன
சிறுவன் மள்ளரும் உளரே அதா அன்று
பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளி பொரு தெண்கண் கேட்பின்
அது போர் என்னும் என்னையும் உளனே!

- புறம்: 89 -

அசோகன் வீதி,
மட்டுவல் தெற்கு,
சாவகச்சேரி

— குடும்பத்தினர்

[5510]

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



ஓம்

ஓம்



## வீரவேங்கை டட்லியா

(தேவசிகாமணி - வரலெட்சுமி)

(வல்வெட்டித்துறை)

(27. 07. 1991 அன்று ஆனையிறவில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

மலர்வு: **22.02.1971**

வீரச்சாவு: **27.07.1991**

**திதி:- 03. 08. 1993**

எங்கள் அவைத் தலைவியவள் எங்குதான் சென்றனளோ?
ஆண்டுகள் ஓடுதம்மா அவள் நினைவால் வாடுகிறோம்
அக்கினிக் குஞ்சொன்று அண்ணன் அவன் பாதையிலே
அடியெடுத்து நடந்த தன்றோ ஆனையிறவுப் போரினிலே
அவள் நெடுந்தோள் சுமந்த தோழியர்கள் கூறினரே அவ்வீரத்தை.
அன்னைக்கோர் வீரத்தாய் திருநாமம் சூட்டியவள்
ஈழத் திருநாட்டின் அடிக்கல்லாய் ஆனாளம்மா!!

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நின் பிரிவால் வாடும்
அம்மா, அண்ணா, சகோதரிமார்,
அத்தான்மார், பெறாமக்கள், மருமகன்.

ரூபவாசம்
சடையாண்டி கோவில் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை

(5516)

சிந்தனைக்கு

பரியது கூர்ங்கோட்டது ஆயினும்
யானை வெரூஉம் புலி தாக்குறின்
திருக்குறள்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05


## 'இதயபூமி-I' தந்த அதிர்ச்சி

இனப்பிரச்சினைக்கு தற்பொழுதும், இராணுவ தீர்வு பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசியல்வாதிகளுக்கும், ராணுவத்தரப்பினருக்கும் 'இதயபூமி- I' தாக்குதல் நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் ஈட்டிய பெருவெற்றியானது பேரதிர்ச்சி அளிக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை. இவ்வருடத்தில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரிய இத்தாக்குதல் நடவடிக்கை என்பது மட்டுமல்ல, இராணுவ, அரசியல் முக்கியத்துவமும் வாய்ந்ததுகூட.

இராணுவ ரீதியாக, பல வகையில் முக்கியத்துவம் பெறும் இத்தாக்குதல், கடந்த வருடம் கட்டைக்காட்டில், விடுதலைப்புலிகள் மேற்கொண்ட வெற்றிகரமான தாக்குதலுக்குப் பின்னர் இடம் பெற்ற பாரிய நடவடிக்கை ஆகும். ஆனால், இத்தாக்குதலின் சிறப்பம்சம் என்னவெனில், விடுதலைப்புலிகளின் தாக்குதல் இடம்பெறலாம் என இராணுவத்தினர் உசார்படுத்தப்பட்டிருந்த வேளையில் இடம் பெற்றமையாகும்.

அதாவது, 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனப்படுகொலையின், பத்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி விடுதலைப் புலிகள் பாரியதாக்குதல்களை மேற்கொள்ளலாம் என இராணுவம் உசார்ப்படுத்தப்பட்டிருந்த வேளையிலும், விடுதலைப் புலிகள் பெரிய இராணுவ முகாம் ஒன்றையும், அதனைச் சூழவுள்ள மினி முகாம்கள், காவலரண்கள் என்பனவற்றையும் தாக்கி முற்றாக அழித்தமை புலிகளின் தாக்குதல் திறனை வெளிப்படுத்தும் அம்சம் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

மேலும் ஒரு பெரிய இராணுவ முகாமையும், பல மினி முகாம்களையும், காவலரண்களையும் அரை மணி நேரத்தில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்க முடியும் என்பது, அவர்களின் திட்டமிட்ட போராற்றலுக்கும், துல்லியமான தாக்குதலுக்கும் ஒரு சிறப்பான எடுத்துக்காட்டுமாகும்.

மேலும், இத்தாக்குதலானது சிறிலங்கா இராணுவ, அரசியல் தரப்பினர் தீவிர அக்கறை காட்டும் பிரதேசம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது. அதாவது, தமிழர் தாயகத்தை துண்டாடும் பொருட்டும், சிங்கள குடியேற்றங்களைப் பாதுகாக்கும் பொருட்டும் அமைக்கப்பட்டுள்ள தொடர் இரா

கிளாலி கடற் பரப்பில்

## பொருள்களை ஏற்றிவந்த படகு மீது தாக்குதல்

### ஒருவரைக் காணவில்லை

(பூநகரி/கிளிநொச்சி)

கிளாலிக் கடற்பரப்பில் பொருள்களை ஏற்றச்சென்ற படகு மீது சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகுகள் தாக்குதலை மேற்கொண்டன.

கடந்த வாரம் நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் ஒருவரைக் காணவில்லை மற்றையோர் மறுநாள் காலை நீந்திக் கரை சேர்ந்தனர்.

மேற்படி சம்பவம் பற்றி தப்பி வந்த பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த மார்க்கண்டு (வயது 48) என்பவர் விபரிக்கையில்:- கடந்த 17 ஆம் திகதி கடற் புலிகளின் பாதுகாப்பு வழங்கப்படாத வேளையில் ஆலங்கேணி பகுதியில் இருந்த பொருள்களை எடுத்து வருவதற்காக நாங்கள் நால்வர் படகில் கிளாலிக்கரையிலிருந்து மாலை 5 மணியளவில் புறப்பட்டோம்.

சுமார் ஒரு மணி நேரம் கடலில் ஓடிய பின் மற்றொரு படகு எம்முடன் வந்து இணைந்து கொண்டது. தொடர்ந்து இரு படகுகளும் சென்றுகொண்டிருந்த போது திடீரென கடற்பரப்பில் சென்ற பட்ட நான்கு சிறிலங்காவின் கடற்படை பீரங்கிப் படகுகள் வேட்டுக்களைத் தீர்த்தவாறு எமது படகுகளை நோக்கி விரைந்து வந்தன.

கடலிலே படகை ஓடவிட்டவாறு நாங்கள் அனைவரும் கடலிலே பாய்ந்து நீந்தினோம் சுமார் 30 நிமிடங்களின் பின் கடற்படை படகுகள் திரும்பிச் சென்றன.

தொடர்ந்து மறு நாள் அதிகாலை 2 மணியளவில் ஓர் கரையை நோக்கி நீந்தி வந்து கொண்டிருந்த போது அங்கிருந்து எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது இது காரைக் காய்தீவு பகுதி என்பதை உணர்ந்துகொண்ட நாம் மீண்டும் எதிராக நீந்தி 3 மணியளவில் அல்லிப்பளை பகுதியை வந்தடைந்தோம் தப்பி வந்த மு. தம்பிமுத்து (55] க. கந்தசாமி (37) ஆகிய இருவருமே தப்பியமற்றிருவராவர் இவர்களில்பா சதீஸ்வரன்(23) நிலைபற்றி இதுவரை தகவல் இல்லை என தெரிவித்தனர் (86)

## தாண்டிக்குளம் முகாமில் இருவர் தடுத்து வைப்பு

### மேலும் இருவர் வடபகுதி வந்தனர்

(வவுனியா)

தடைசெய்யப்பட்ட பொருள்களுடன்வந்ததாகக் கூறப்படும் இருவர்நேற்றுமுன் தினம்தாண்டிக்குளம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் நேற்றும் வடபகுதி பயணிகளை நொச்சிமோட்டைப் பாடசாலைக்கு முன்னால் உள்ள வயல் வெளியினூடாகவே வருமாறு அழைத்தனர்.

இதேவேளை கடந்த 14ஆம் திகதி பல்லேகல தடுப்பு முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட இருவர் நேற்று தாண்டிக்குளத்தினூடாக வடபகுதிக்கு வந்து சேர்ந்தனர். சீனிப்பிள்ளை சுந்தரலிங்கம் (வயது 37, உடுத்துறை வடக்கு தாளையடி), குமாரசாமி ஞானசேகரம் (வயது 26, பத்திராயன் வடக்கு தாளையடி) ஆகியோரே வடபகுதி வந்து சேர்ந்தவர்களாவர்.

## நெசவு உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பு

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் உள்ளூர் நெசவு உற்பத்திப் புடைவை வகைகளை சந்தைப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பெருமளவு உள்ளூர் நெசவு உற்பத்திப் புடைவை வகைகள் உற்பத்தியாளர்களிடம் இருந்து தற்போது கொள்வனவு செய்யப்பட்டிருப்பதாகவும், இவற்றை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நியாய விலையில் மக்களுக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் சமாசத் தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (41)

குற்றஞ்சாட்டப்பட்டோர்

# எந்நாட்டை சேர்ந்தவர்கள் என்பது காட்டப்படவில்லை

### ராஜீவ் கொலை வழக்கில் வாதம்

(சென்னை)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் இலங்கை தமிழர்களுக்கு அவர்கள் அகதிகள் என்ற வகையில் கொடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. சட்டப்படி அவர்கள் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை என்று எதிரி தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞரான ரி ராமதாஸ் தெரிவித்தார்

தொடர்ந்து வாதிட்ட அவர், அகதிகள் தொடர்பான 1951 ஐ நா. சாசனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அரசதரப்பினர் மதித்து செயற்படவில்லை. சட்ட விரோதமாக இன்னொரு நாட்டுக்குள் அகதிகள் புகுந்ததிற்காக அவர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதை ஐ நா. சாசன ஏற்பாடுகள் தடுத்து அவர்களுக்கு பாதுகாப்பளிக்கின்றன என்றார்

வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றங்களை உருவகப்படுத்தமுன் அவர்கள் எந்நாட்டவர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுபத்திரத்தை இந்திய அரசிடமிருந்து பெறவேண்டும் அதுவரை நீதிமன்றம் குற்றம் சுமத்துவதை தாமதிக்க வேண்டும் இந்திய பிரஜாவுரிமை சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் இவர்களின் சாகியத்தை உறுதிப்படுத்த வேண்டியது சட்ட ரீதியான கடமை அச்சான்றுபத்திரங்களை இந்திய அரசிடமிருந்து பெறாத பட்சத்தில் இவர்களுக்கெதிராக வெளிநாட்டவர் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர முடியாது.

குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலங்களை உறுதியானசான்றாக எடுத்துக்கொள்ள முடியாது ஒப்புதல் வாக்கு மூலத்தில் ஒரு சிறு தவறு இருந்தால் கூட முழு வாக்கு மூலத்தையும் நீதிமன்றம் நிராகரிக்கவேண்டும் வாக்கு மூலத்தின் ஒரு பகுதியில் மாத்திரம் நம்பிக்கை வைத்து செயற்படமுடியாது என்று நீதிமன்றமே கூறியுள்ளது.

ராஜீவ்காந்தியை கொலை செய்வதற்கான சதித்திட்டம் தீட்டப்பட்டநேரம் இடம்ஆகியவற்றை தெட்டத்தெளிவாக குறிப்பிட அரசு தரப்பினர் தவறிவிட்டனர். 1987க்கும் 1991க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள பல்வேறு இடங்களில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாகவே அரசதரப்பினர் கூறியுள்ளனர் என வழக்கறிஞர் தமது வாதத்தின் போது குறிப்பிட்டார்.

## படையினர் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

(கொழும்பு)

பாடசாலை அனுமதியில் வடகிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் முப்படையினர் மற்றும் பொலிசாரின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும என அரச பாடசாலை அதிபர்கள் கோரப்பட்டுள்ளனர்.

இதற்கான சுற்று நிருபம் கல்வி அமைச்சினால் சகல அரச பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் கல்வி அமைச்சுக்கு பொறுப்பானவருமான டி. பி. விஜேதுங்காவின் விதப்புரைக்கு இணங்க பாடசாலை அனுமதி தொடர்பாக கல்வி அமைச்சினால் இச்சுற்று நிருபம் அனுப்பப்பட்டுள்ளது.

## துப்பாக்கி தவறுதலாக இயங்கி மூவர் காயம்

கொழும்பு கோட்டை யோர்க் வீதியில் உள்ள அரச வங்கியிலிருந்து நாரகன்பிட்டி பொலிசாரின் சம்பளப்பணத்தை எடுத்துக்கொண்டு திரும்புகையில் பொலிசார் ஒருவரின் துப்பாக்கி வங்கி வாசலில் தவறுதலாக வெடித்ததால் வங்கி ஊழியர் ஒருவரும் வேறு மூவரும் காயமடைந்தனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இச் சம்பவத்தில் வங்கி ஊழியரான செல்வி அஞ்சனா ஆறுமுகம் வழிப்போக்கர்களான பிரியந்த, ராமமூர்த்தி, கான்ஸ்டபிள் தயாவன்ச ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

## சமுகமளிக்கவும்

தேசிய கல்வி நிறுவகம் பட்டப் பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு இதுவரை தோற்ற முடியாதவர்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 30 - 7 - 1993 மாலை 2. 30 மணிக்கு உரிய ஆவணங்களுடன் யாழ் கல்வித் திணைக்களத்துக்குச் சமுகமளிக்குமாறு மேற்படி நெறியின் இணைப்பாளர் அறிவிக்கின்றார்.

★

தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பயிற்சிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையினை முடித்துக் கொண்டவர்கள் அனைவரும் எதிர்வரும் 1 - 8 - 1993 ஞாயிற்றுக் கிழமை காலை 9 00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு மேற்படி நெறியின் இணைப்பாளர் அறிவிக்கின்றார்.

## கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்குஇடம்பெறும். (21)

# தமிழர்கள் தன்னாட்சி உரிமை

## சீக்கிய பொற்கோவிலில் பொலிசார் தேடுதல்

(டில்லி)

இந்தியப் பொலிசாரால்

பான சீக்கிய குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியின் செயலர் ரஞ்சித் சிங் கண்டிக்குள்ளார்.

மேலும், இத்தாக்குதலானது சிறிலங்கா இராணுவ, அரசியல் தரப்பினர் தீவிர அக்கறை காட்டும் பிரதேசம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது. அதாவது, தமிழர் தாயகத்தை துண்டாடும் பொருட்டும், சிங்கள குடியேற்றங்களைப் பாதுகாக்கும் பொருட்டும் அமைக்கப்பட்டுள்ள தொடர் இராணுவ முகாம்களையும், காவலரண்களையும் கொண்ட பகுதியில் இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது இந்நிலையில் இப் பகுதியில் இராணுவத்தினரின் போர்த் தந்திரோபாயங்களின் செயற்பாடு, நம்பிக்கைத் தன்மை குறித்து சந்தேகங்களை இது எழுப்பியுள்ளது.

இத்தாக்குதலானது. இராணுவ ரீதியாக மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவும் இடம் பெற்ற காலகட்டம் மிகவும் முக்கியமானதாகும். அதாவது, சிறிலங்காவின் புதிய ஜனாதிபதியாக டி.பி. விஜயதுங்கா பதவி ஏற்றபின் நடைபெற்றுள்ள பெரிய தாக்குதல் என்பதோடு, இனப்பிரச்சினை குறித்து என்ன தீர்வை மேற்கொள்வது என புதிய அரசாங்கம் எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில் இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இந் நிலையில் புதிய அரசு இத் தாக்குதல் குறித்தும் புலிகளின் இராணுவ பலம் குறித்தும் பரிசீலிக்க உதவிபுரியக் கூடும்.

அத்தோடு, பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய தீர்வுத்திட்டம் ஒன்றை முன் வைக்காமலே கலைக்கப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலானது, இனப்பிரச்சினைக்கான நியாயபூர்வமான தீர்வை சிங்கள அரசியல்வாதிகள் ஒத்திப் போட்டுச்செல்லச் செல்ல தாக்குதல்களும், மோதல்களும் அதனால் ஏற்படும் இழப்புக்களும் அதிகரித்துச் செல்லும் என்பதை உணர்த்துவதோடு, சிங்கள அரசியல்வாதிகள் விரும்புவது போன்று இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியான தீர்வு ஒன்றைக் கண்டுவிட முடியாது என்பதையும் தெளிவாக உணர்த்தக் கூடியதும் ஆகும்.

இந்நிலையிலும், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என சிறிலங்கா அரசு கருதுமானால், ''இதய பூமி 1'' போன்ற இன்னும் பல தாக்குதல்களுக்கு சிறிலங்கா அரசு முகம் கொடுக்க வேண்டிவரினும் ஆச்சரியப்பட ஏதுமில்லை. இதனால்பெரும்இழப்புக்களையும் சந்திக்க வேண்டிவரும். ஆகையினால் இனப்பிரச்சினை குறித்து தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் மேற்கொள்ளுதலே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழியாகும்.

# தமிழர்கள் தன்னாட்சி உரிமை பெற அனுமதிக்க வேண்டும்

## தமிழர்களின் லண்டன் பேரணியில் பிரிட்டிஷ் எம்.பி

(லண்டன்)

பிரிட்டனுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் நடைபெற்ற ஆயுத விற்பனை குறித்து நான் இவ்வாண்டின் முற்பகுதியில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினேன் அவர்கள் பதில் கூறவில்லை நான் மீண்டும் இப்பிரச்சினையை பாராளுமன்ற கேள்வியாக எழுத்தில் போட்ட போது இந்த பேச்சு வார்த்தைகள் இரகசியமானவை எனஎனக்கு பதில் கிடைத்தது. இவ்வாறு பிரிட்டிஷ் எம். பியான நீல் ஜெரால்ட் தெரிவித்தார்.

கடந்த 23 ஆம் திகதி லண்டன் நகரில் தமிழர்கள் நடத்திய 1983 இனக்கலக 10 ஆம் ஆண்டு எதிர்ப்பு பேரணியின் இறுதியில் நடந்த பொதுக் கூட்டத்தில் இந்த பிரிட்டிஷ் எம். பியும் கலந்துகொண்டார் இவரிடம் பிரிட்டிஷ் - சிறிலங்கா ஆயுத வர்த்தகம் தொடர்பாக பி. பி. ஸி. நிருபர் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். நீல் ஜெரால்ட் பிரதிநிதித்துவப் படுத்தும் தொகுதியிலேயே அதிக இலங்கைத் தமிழர்கள் வசிப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

பொதுக் கூட்டத்தில் தமிழர்கள் மத்தியில் பிரிட்டனின் எதிர்க்கட்சியான தொழிற் கட்சியின் எம். பியான ஜெர்மி கோர்பின் உரையாற்றினார். அமைதிதேடி, மனிதஉரிமை கோரி, சுயமரியாதை கோரி' நீதி கோரி, இவற்றிற்காக உயிர் நீத்தவர்களை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். மனித உரிமை மீறப்படுவதை அனைத்துலக நிறுவனங்கள் விசாரிக்க வேண்டும், தமிழ் மக்கள் அமைதியுடன் வாழ தன்னாட்சி உரிமை பெற அனுமதிக்க வேண்டும் மக்கள் தாம் விரும்பியபடி சுயமரியாதையுடன் வாழ அனுமதிக்கப்படாவிட்டால் அமைதி ஏற்படமுடியாது இலங்கையில் நடக்கும் வன்முறை தொடர்ந்து நடப்பதை நாம் எவருமே விரும்பவில்லை. அந்த தீவில் மீண்டும் அமைதி திரும்ப வேண்டும். அந்த நம்பிக்கை எனக்குண்டு என்று அவர் தனது உரையின் போது குறிப்பிட்டார்.

## இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

# அரசியலிலிருந்து மதத்தை பிரிக்க புதிய பிரேரணை

(டில்லி)

அரசியலில் இருந்து மதத்தை பிரிப்பதான பிரேரணை ஒன்றை இந்திய அரசு இன்று ஆரம்பிக்கும் இந்திய பாராளுமன்றத்தின் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கவுள்ளது. எல்லா மதங்களுக்கும் அரசு சமமான மதிப்பு அளிக்கின்றது என்பதை குறிப்பிடுவதற்காக அடிப்படை உரிமை தொடர்பான அரசியல் யாப்பில் புதிய சரத்தை சேர்க்க இந்த பிரேரணை வழி செய்கின்றது.

எந்த ஒரு சங்கம் அல்லது தனி மனித அமைப்பு மதம், இனம், பிறந்த இடம், சாதி, மொழி போன்ற குடிமக்களிடையே ஒற்றுமை குலைவு, பகைமையை வளர்த்தாலோ வளர்த்திட முயற்சித்தாலோ அத்தகைய அமைப்புகளை தடைசெய்ய தேவையான சட்டங்களை இயற்றிட இந்த பிரேரணை உதவும். அத்துடன் மேற்கூறிய பிரிவுகளின் அடிப்படையில் மக்களிடையே பகைமையை வளர்க்கும், வளர்த்திட முயற்சிக்கும் வேட்பாளர்களை பாராளுமன்றம், சட்டப்பேரவை ஆகியவற்றிலிருந்து தகுதி நீக்கம் செய்யவும் இந்த சட்ட திருத்தம் வகை செய்யும்.

## இஸ்ரேல் விமானங்கள் லெபனானில் தாக்குதல்

(பெய்ரூட்)

லெபனானில் உள்ள ஷிஸ்புல்லா கெரில்லா தளங்கள் மீது இஸ்ரேலிய யுத்த விமானங்களும் உலங்கு வானூர்திகளும் கடும் தாக்குதல் நடத்தியுள்ளன. கடந்த 10 ஆண்டுகளில் நடைபெறாத கடுமையான தாக்குதல் இது எனக் கூறப்படுகிறது. இத்தாக்குதலில் சிரியா படையினர் ஆறு பேரும் ஒன்பது லெபனான் வாசிகளும் பலியாகினர்.

இதனைத்தொடர்ந்து லெபனான் கெரிலாக்கள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் இரு இஸ்ரேலியர் பலியாகினர் என்றும் ஐவர் காயமடைந்தனர் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

## சீக்கிய பொற்கோவிலில் பொலிசார் தேடுதல்

(டில்லி)

இந்தியப் பொலிசாரால் தீவிரமாக தேடப்பட்டு வரும் இரு சீக்கிய போராளிகளை கைது செய்யும் நோக்கில் நேற்று முன்தினமிரவு 50 ஆயுதம் தாங்கிய பொலிசார் அமிர்தசரஸில் உள்ள சீக்கியரின் பொற் கோவிலினுள் நுழைந்து திடீர் சோதனை நடத்தினர்.

எனினும் அப்போராளிகள் பொற்கோவிலில் அகப்படவில்லை எனக் கூறப்படுகிறது. பஞ்சாப் தொழிலதிபர் ஒருவரை இருவாரங்களின் முன் கடத்திச் சென்ற குற்றத்திற்காக இந்த இரு சீக்கிய போராளிகளையும் பொலிசார் தேடி வருகின்றனர்.

பொலிசார் பொற்கோவிலினுள் நுழைந்ததை பொற்கோவிலின் நிர்வாக அமைப்பான சீக்கிய குருத்துவாரா பிரபந்தக் கமிட்டியின் செயலர் ரஞ்சித் சிங் கண்டித்துள்ளார்.

## சுவாமியின் மனு ஆணையாளருக்கு அனுப்பப்பட்டது

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவை சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து பதவிநீக்கம் செய்யும்படி ஜனதாக் கட்சித் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான டாக்டர்சுப்பிரமணியம்சுவாமி கொடுத்த மனு, தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டியினால், தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

## புது டில்லியில் மூவர் கைது

சட்டவிரோதமானமுறையில் சர்வதேச தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டதற்காக மூன்று இலங்கைத்தமிழர்கள் இந்திய அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குணலிங்கம், ராஜரட்ணம் ஆனந்தராஜ் சர்மா ஆகிய மூவரும் இந்தியாவில் பூநகரி என்றஇடத்தில் உள்ள தொலைபேசி அழைப்பு நிலையத்தில் மோசடியான முறையில் சர்வதேச தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## எப்.பி.ஐ இயக்குனர் நீக்கம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் எப்.பி.ஐ இயக்குனர் வில்லியம் செஷன்சை பதவி நீக்கம்செய்துள்ளார்சட்டமா அதிபர் ஜெனட்ரெனோவின் சிபார்சின் பேரில் தாம் அவரை பதவி நீக்கம் செய்வதாக கிளிங்டன் கூறினார் புதிய எப்.பி.ஐ இயக்குனராக 43 வயதான நியூயோர்க் சமஷ்டி நீதிபதி லூயிஸ்பிரீ நியமிக்கப்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

யாழ்ப்பாணத்திலுள்ள யுத்தக் கைதிகளின்

# உறவினர்களை திரும்புமாறு அஸ்ஸாஷி தேரர் கடிதம்

(கொழும்பு)

தற்போது விடுதலைப்புலிகளின்காவலில் உள்ள33 போர்க்கைதிகளினதும் உறவினர்களை மீண்டும்தெற்கிற்கு வருமாறு நிர்ப்பந்திக்கும் கடிதம் ஒன்றை மனிதவள பாதுகாப்பு இயக்க தலைவரும் முன்பு யாழ். வந்து சென்றவருமான மாதம்பாகம அஸ்ஸாஷி தேரோ உறவினர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ் யுத்தக் கைதிகளைப் பார்வையிட வந்த அவர்களின் உறவினர்களில் சிலர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது தெரிந்ததே.

அஸ்ஸாஷிதேரோ சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஊடாக இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு:

அன்புக்குரிய பெற்றோர் மற்றும் சகோதர, சகோதரியரே நீங்கள் உங்கள் மகன்மாரை பார்ப்பதற்காக யாழ்ப்பாணம் சென்று ஒரு மாதத்திற்கும் மேலாகிறது. நீங்கள் உங்கள் மகன்மாரில் வைத்திருக்கும் அன்பு காரணமாக அவர்களை மீட்டுக் கொண்டுவராமல் திரும்புவதில்லை என்று கூறினாலும் அது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

விடுதலைப் புலிகள் தற்போது பெற்றோர்களையும் தடுத்துவைத்துள்ளனர்எனசில பத்திரிகைகள் வாயிலாக பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன அதனால் இங்கிருக்கும் உறவினர்கள் சகோதர, சகோதரிகள் விசனம் அடைந்துள்ளனர். நாம் அவர்கள் அனைவருக்கும் உண்மை நிலையை விளக்கவேண்டிய தன் அவசியம் உள்ளது.

நாம் தற்போதும் பொறுப்பு வாய்ந்தவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது உங்கள் பிள்ளைகளை மனிதாபிமான ரீதியில் மீட்டுக்கொள்ளும் நோக்கில்தான். நீங்கள் தொடர்ந்தும் அங்கே தங்கியிருப்பதானது எம் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாக அமைவதுடன் அதை மேலும் தாமதப்படுத்துவதாகவே அமைகின்றது. அத்துடன் உங்களின் இச்செயல் பிரச்சினைக்கு தீர்வினை கொண்டுவராது என்பது எம் கருத்தாகும்.

எனவே தொடர்ந்தும் உங்கள் பிள்ளைகளை உண்ணாவிரதம் இருக்க தூண்டவேண்டாம் என்றும் விரைவிலேயே நீங்கள் அனைவரும் அங்கிருந்து வந்துவிடவேண்டுமென்றும கேட்டுக் கொள்வதுடன் அப்படி நீங்கள் செய்யாதவிடத்து தொடர்ந்து இதுவிடயத்தில் எம்மால் ஒன்றும்செய்யமுடியாதிருக்கும் என்பதையும் வலியுறுத்தி சொல்லவிரும்புகிறோம்.

தொடர்ந்தும் இருந்துவரும் பரஸ்பர அவநம்பிக்கை காரணமாகவும் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுகாமை காரணமாகவும் இம்முறை உங்கள்பிள்ளைகளைவிடுவிக்க முடியாமல் போய்விட்டது.

இப்படிக்கு
மாதம்பாகம அஸ்ஸாஷி
தேரோ

இதே சமயம் யுத்தக்கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம் இருக்கும் செய்தியுடன் உறவினர்களில் இருவர் தற்போது கொழும்பு புறப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் செல்லவேண்டாம் என

# உறவினர்களை ஜனாதிபதி எச்சரித்திருந்தாராம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு பொலிசாரின் பெற்றோரை கூட்டிச் சென்ற விடயத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே பொறுப்பு. அரசின் மீது இந்த பொறுப்பை சுமத்துவது பிழையானது என புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சர் பி. தயாரட்ண பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

39 பொலிசாரை விடுவிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு முயறசியில் சம்பந்தப்பட்டது. குறித்த பொலிசாரின் குடும்பத்தினர் யாழ். செல்லமுன் அவர்களை சென்று சந்தித்த ஜனாதிபதி விஜயதுங்க 'புலிகளின் பொறியில் சிக்காதீர்கள். உண்ணாவிரத முயற்சி புலிகளின் பொறியாகும்' என எச்சரித்திருந்ததாகவும்அமைச்சர் தயாரட்ண மேலும் தெரிவித்தார்.

எனினும் உறவினர் யாழ். செல்வதில் பிடிவாதமாக இருந்ததால் அரசு கப்பல் வசதியை செய்து கொடுத்தது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# உறவினர் யாழ். சென்றது

## லெப்.கேணல் சரா நினைவுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுப் பகுதி சிறிலங்கா இராணுவத்தினருடன் நடைபெற்ற ஆகாயக் கடல் வெளித் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கேணல் சராவின் இரண்டாம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப் படவுள்ளது

இதை ஒட்டி இன்று காலை 8மணிக்கு கல்வியங்காட்டு சந்தியில் உள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்திலுள்ள லெப்டினன்ட் கேணல் சராவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணியும் வைபவம் நடைபெறவுள்ளது.

## பொன்னாலை கரைநோக்கி அகோர ஷெல் தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் கரையோரக் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்றுக் காலை 6 30 மணியளவில் பொன்னாலை,மூளாய், சுழிபுரம் பகுதிகளை நோக்கி அகோர எறிகணை வீச்சினையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் தொடர்ச்சியாக இடம்பெற்ற இத்தாக்குதலில்பல எறிகணைகள் பொன்னாலை, மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளிலும் வயல் வெளிகளிலும் வீழ்ந்து வெடித்தன. இச் சம்பவத்தின் போது கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலும் நடாத்தப்பட்டதுடன், காவல் நிலைகளிலிருந்து வாகனமொன்றில் வெளிவந்த ஆயுதப்படையினர் கரைப்பகுதியிலிருந்து பலத்த பீரங்கி தாக்குதலையும் கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர் எனவும், இதனால் அச்சமடைந்த மீனவர்கள் தொழில்களை கைவிட்டு கரைசேர்ந்தனர் எனவும், சிலரது மீன்பிடி உபகரணங்கள் கடலிலே கைவிடப்பட்ட நிலையில் திரும்பியுள்ளனர் எனவும் மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

## வினாத்தாள் நாளை வரும்?

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாத முற்பகுதியில் நடைபெற இருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குரிய முதலாம் தொகுதி வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து விமான மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து யாழ். கல்வித்திணைக்களம் கொண்டுவரப்படுமென யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமே மேற்படி வினாத்தாள்களை தம்முடன் எடுத்து வருவார் என அறிவிக்கப்பட்டது.

மேலும் இவ்வினாத்தாள்கள் நாளை பலாலி விமான நிலையத்திற்கு எடுத்து வரப்படலாம் என தெரியவருகின்றது. (பா)

## தபாலில்

பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பிரிவில் பெற்றுக் கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பரீட்சை அனுமதி அட்டைகள் எதுவும்தபாலில் அனுப்பி வைக்கப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.(க)

மாத்தறை

# இந்திரா காங்கிரசுக்கு எதிராக 40 நம்பிக்கையில்லாப் பிரேரணை

(டில்லி)

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசிற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்திருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தின் மக்களவையில் நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து வந்திருந்த நாற்பது பிரேரணைகளில் மாக்சிய கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் திரு. அஜிமுக்குபா ஜெயா கொடுத்திருந்த பிரேரணை குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்றுக் காலை தொடங்கிய சில மணி நேரத்தில் மக்களவைத் தலைவர் திரு. சிவராஜ்பாட்டேல் தெரிவித்தார்.

தேசிய முன்னணி, இடதுசாரிக்கட்சிகள், பாரதீய ஜனதாக் கட்சி, அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை உடனடியாகத் தொடங்குமாறு அரச தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டதை ஏற்று விவாதம் தொடங்கியது.

நாளை பிரதமர் திரு. நரசிம்மராவ் இந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபின் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது

## வலி-மேற்கு பகுதிக்கு ச. தே. செஞ்சிலுவை விஜயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட வலி-வடக்கு மற்றும் வலி-மேற்கு பகுதிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் குழு நேற்று பயணமாகியது.

திரு சன்றின், செல்வி ஜெசபின் ஆகியோர் இக்குழுவில் அடங்குகின்றனர். இவர்கள் நேற்றே மாதகல்பகுதியை பார்வையிட்டனர். இன்று பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களைபார்வையிடுவர் எனவும் நாளை இளவாலைப் பகுதியைச் சென்று பார்வையிடவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## ஆனையிறவு சமர் இரண்டாண்டு நினைவில்

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 13 | 27 |
| 07 | 07 |
| 1974 | 1991 |



### 2-ம் லெப். கந்தன்

(டானியல் ராஜ்குமார் - சக்கோட்டை)

இவரையும் இவருடன் ஆனையிறவுச் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சகவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சக்கோட்டை, பெற்றோர், சகோதரர்,
அல்வாய் வடக்கு. (5547) குடும்பத்தார்.

# உறவினர் யாழ். சென்றது ச.தே.செஞ்சிலுவையின் சதி

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் பிடியில் உள்ள பொலிசாரை விடுவிப்பதென்ற பெயரில் பெற்றோரை யாழ்ப்பாணம் கூட்டிச் சென்றது ஒரு சதித்திட்டமாகும். செஞ்சிலுவைச் சங்கத்தினரும் அதன் பின்னால் உள்ள ஈழம் வாதிகளும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

பொலிசாரை விடுவிக்க யாழ் சென்ற உறவினர் நிலை என்ன? செஞ்சிலுவைச் சங்கம் தான் இதற்கு வழிசெய்தது. இதை சதி என்றே கூறுவேன். அரசு புலிகளுக்கு என்ன கொடுத்தது? இதை பாராளுமன்றத்தில் அரசு அறிவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கைதானோர் உள்ள இடம் வெளியிட முடியாது

### விமல் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பில் கைது செய்யப்படுபவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை பதுகாப்பு காரணங்களுக்காக வெளியிடமுடியாது. ஆனால் கைது செய்யப்படுபவர் விபரம் அவர்களது நெருங்கிய உறவினருக்கு தெரிவிக்கப்படுகிறது என பாராளுமன்ற விவகார அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சந்தேகத்தின் பேரில் நபர்களை பொலிசார் கைது செய்யும்போது இனரீதியாக செயற்படவில்லை. தமிழர்கள் கொழும்பில் வகை தொகையின்றி அடாத்தாக கைதாகவில்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

## பொலிஸ் நிலையத்தை தாக்க இந்தியப்படை ஆயுத உதவி

### கைதான இருவருக்கு சிறை

(கொழும்பு)

இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் தங்கியிருந்த காலத்தில் சவளக்கடை பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்திய போது கைது செய்யப்பட்ட இரு ஈ.என்.டி.எல்.எப். உறுப்பினர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 14 வருட கடூழிய சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

1989 இல் நடைபெற்ற இந்த பொலிஸ் நிலைய தாக்குதல் முயற்சிக்காக இந்திய அமைதிப்படையினர் உலங்குவானூர்தி மூலம் எல்.எம்.ஜி. சீருடைகள், ..ப்பாத்து ஆகியவற்றை போட்டதாகவும், தாம் இரு மாத பயிற்சி பெற்ற ஈ.என்.டி.எல்.எப் உறுப்பினர்கள் எனவும் முகாமில் அப்போது 448 துப்பாக்கிகள் இருந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தியப்படையினரிடம் தாம் ஏ.கே.47, எல்.எம்.ஜி, ஜி 3, எஸ்.எம்.ஜி. போன்ற ஆயுதப் பயிற்சிபெற்றதாக மற்றையவர் ஒப்புக்கொண்டுள்ளார் இந்திய இராணுவத்தினர் திரும்பிச் சென்றதும் அரசுடன் பேச்சு நடத்தும் புலிகள் தம்மை தாக்கிவிடலாம் என்று கருதியே சவளக்கடை பொலிஸ் நிலையத்தை தாக்கியதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 26-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-9220, 22-3088, 42-1320, 24-5396, 26-0763
27-7542, 42-1722, 26-6527, 24-4957, 27-7750
26-0987, 41-9855, 41-9167, 26-7525.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-4019, 27-7081, 26-8810.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

பெற்றுக் கொள்ளும்படி மாணவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பரீட்சை அனுமதி அட்டைகள் எதுவும் தபாலில் அனுப்பி வைக்கப்படமாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

---

**குமண**

சீட்டுக்களில் கையொப்பமிட்டுத் தமது பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

மேற்படி தினத்தில் பணிமனைக்குச் சமுகமளிக்காதவர்கள் தமது விண்ணத்தை வாபஸ் பெற்றவர்களாகக் கருதப்படுவர் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. (தி)

---

**பிரச்சினை**

இல்லை. இனப்பிரச்சினை இலங்கையின் உள் பிரச்சினை என்பதை இந்தியா ஏற்றுள்ளது.

பத்திரிகையாளர்: கடந்த பத்து ஆண்டுகால இனப்பிரச்சினை பற்றி என்ன சொல்கிறீர்கள்?

பிரட்மன்வீரக்கோன்: 1983 கலவரத்தால் எல்லோரும் பாடம் படித்துள்ளார்கள். பிரச்சினையைத் தீர்க்கவும் விரும்புகின்றனர்.

---

**கறுப்பு**

இதேவேளை மக்கள் களியாட்டங்களைத் தவிர்த்து கொள்வதுடன் கடைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புகளின் முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருக்கும்.

இதேவேளைஇன்றையகறுப்பு ஜூலை பத்தாண்டு நினைவுக் கூட்டங்கள் இன்று இரவு 8-00 மணிக்கு யாழ். குடாவில் மூன்று இடங்களில் நடைபெறவுள்ளன.

தீவக கோட்ட நினைவு தினக் கூட்டம் நாவற்குழி லவனிதா குடியிருப்பிலும், வலிகாமக் கோட்டத்தில் சங்கானை நிகர வைரவர் கோவிலடியிலும், வடமராட்சி கோட்டத்தில வல்வெட்டி திருவில் மைதானத்திலும் இடம் பெறுகின்றன.

---

மேலும் இவ்வினாத்தாள்கள் நாளை பலாலி விமான நிலையத்திற்கு எடுத்து வரப்படலாம் என தெரியவருகின்றது. (பா)

---

**மாத்தறை**

தறையைச் சேர்ந்தவர்கள் எனவும், இதனால் ஆத்திரமடைந்த இராணுவத்தினர் சிவிலுடையில் சென்று இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

---

**ஆயுத விற்பனையில்**

1992இல் அமெரிக்காவிற்கு அடுத்து ஆயுத விநியோகம் செய்த நாடுகளில் பிரான்ஸ் இரண்டாவது இடம் வகிக்கின்றது. இது 380கோடி டொலர் ஆயுதங்களை விநியோகித்துள்ளது. இதை தொடர்ந்து பிரிட்டன் 240கோடி டொலர், ரஷ்யா 130 கோடி டொலர், ஜேர்மனி 70 கோடி டொலர், ஸ்பெயின் 60 கோடி டொலர், இத்தாலி 40 கோடி டொலர், இஸ்ரேல் 30 கோடி டொலர், ஈரான்20கோடிடொலர், சீனா 10 கோடி டொலர்.

---

**பிரஜைகள்**

நடமாடத் தடை விதித்தனர். அப்படி நடமாடுபவர்கள் லாந்தர் ஒன்றை எடுத்துச் செல்லவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருந்தது.

மேற்படி பிரஜைகள் குழுத் தலைவர் சம்பவதினம் இரவு 9.30 மணியளவில் கையில் வெளிச்சம் எதுவுமின்றி நடமாடியபோது சூட்டுக்கு இலக்கானதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

---

**மன்னாரில்**

வில் மருதமடுப் பகுதிக்கு வந்த இரு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் 23 எம்.எம். தாக்குதலை மேற்கொண்ட பின் அங்குள்ள ஜீவோதய விவசாயப் பண்ணை மீது குண்டு வீச்சுக்களை மேற்கொண்டன. இத்தாக்குதலினால் வீடொன்று சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

---

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சகவேங்கைகளையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

சக்கோட்டை, அல்வாய் வடக்கு. (5547)

பெற்றோர், சகோதரர், குடும்பத்தார்.

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்துரை நாகம்மா

வண்ணாங்கேணி, கண்டிவீதி, பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட சேமன் சின்னத்துரையின் மனைவி நாகம்மா 26 - 7 - 1993 நேற்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பளையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (27 - 7 - 1993) செவ்வாய்க் கிழமை பி.ப 2 00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மலையான்காட்டு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:-

மகன், சி. சுந்தரலிங்கம்,
பிள்ளைகள், உறவினர்கள்.

விஸ்ணுகிரி,
வண்ணாங்கேணி,
பளை. [5548]

---

## திருமதி ஞானம்மா இராசையா

திருமதி ஞானம்மா இராசையா கொழும்பில் காலமானார் அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இராசையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், நாகேஸ்வரன் (சுவிஸ்), ரோகிணீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான குகனேஸ்வரி, சிவனேஸ்வரி, கமலேஸ்வரி, செல்வனேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஞானபூரணம், இராசரத்தினம், அன்னம்மா, சிவபாக்கியம், அசுபதி, கைலாயநாதன் [உதவிக் காணி ஆணையாளர், செயலகம் யாழ்ப்பாணம்], காலஞ்சென்றவர்களான இராசதுரை, குமாரலிங்கம் ஆகியோரின் சகோதரியும், யோகநாதன் (ஆசிரியர் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை), அருந்ததி (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், அருண்ராஜ் [சுவிஸ்] மதூஷாவின் பேர்த்தியும், வயிரவப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், சோமசுந்தரம், மகாலிங்கம், திருமதி நா. செல்லையா ஆகியோரின் மைத்துனியும், இரத்தினம்-பூமாலை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

இ. யோகநாதன்
(மருமகன்)

"இராசஞான பவன்"
சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில். [5549]